**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.61/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி. கௌசல்யா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 1 வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் . | எஸ்.கே.கிரி | மதம் . | |
| த/பெ . | எஸ்.கே. கேசவ நாயுடு | ஜாதி . | |
| வயது . | 50 | கிராமம் . | புத்தூர் |
| தொழில் | | வட்டம் . | |

**வாதி தரப்பு 1வது சாட்சியின் முதல் விசாரணை**

இவ்வழக்கில் நான் வாதி ஆவேன். எனது பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் தாக்கல் செய்கிறேன். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு படித்து விளக்கி கூறப்பட்டது. சரியாக உள்ளது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அ.வ.எண்.100/2003ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். அசல் வழக்கு எண்.100/2003 தீர்ப்பின்படி எனது பெயரில் 25/01/2010 தேதியில் தாவா சொத்து குறித்து பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் கணிண நகல் **வா.சா.ஆ.2** ஆகும். அ.வ.எண்.100/2003ன் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேற்று மனு இ.பி.68/2016ன் படி நிறைவேற்றப்பட்ட பட்டுவாடா ரசீது சான்றிட்ட **வா.சா.ஆ.3** ஆகும். 31/07/2019 தேதியில் திருத்தணி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு நகல் **வா.சா.ஆ.4** ஆகும். அந்த புகாரின்மீது எனது பெயரில் கொடுக்கப்பட்டுள்ள புகார் ஏற்பு மனு ரசீது **வா.சா.ஆ.5** ஆகும். தாவா சொத்திற்கு எனது பெயரில் கொடுக்கப்பட்டுள்ள பட்டா எண்.1004 கணிணி நகல் **வா.சா.ஆ.6** ஆகும். நிறைவேற்று மனு 68/2016ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகும். தாவா சொத்திற்கு 01/01/2000 முதல் 16/09/2019 தேதி வரையிலான வில்லங்கச் சான்றிதழ் கணிணி நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

**ஆவணங்கள் குறியிடுவதற்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**